# பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனம்
# களனி பல்கலைக்கழகம்
# பணிப்பாளர் பதவி

இலங்கை களனி பல்கலைக்கழக, பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக 2025.07.28 ஆம் திகதி வரை இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரர்கள் 63 வயதுக்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் பட்டப்பின்படிப்புக்கு தகைமை மற்றும் நிர்வாக அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். இது பாளி மற்றும் பௌத்த கற்கைகளுக்கான இலங்கையில் உள்ள பிரதான நிறுவனமாகும். இதன்மூலம் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா தொடக்கம் கலாநிதிப் பட்டம் வரை பட்டப்பின்படிப்பு கற்கைகளில் உள்நாடு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு கற்றல் வாய்ப்புகளை வழங்குகிறது.

வெற்றிகரமான அபேட்சகர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு பொறுப்பாவார் என்பதோடு நிறுவனத்திற்குள் மற்ற அமைப்புகள் மற்றும் மற்ற தேசிய மற்றும் சர்வதேச கல்விசார் நிறுவனங்களுடன் தொழில்சார் உறவுகளை நிறுவுதல் வேண்டும். அவர் சிறந்த ஆளிடை திறன்களை பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பதோடு சமூகத்திற்கான நிறுவனத்தின் கடப்பாடுகளை தெரிந்திருத்தல் வேண்டும். தொலைதூர கல்வி வடிவில் கற்பித்தல்/ கற்றல் அனுபவம் அனுகூலம் ஒன்றாகும்.

1979 இன் 8 ஆம் இலக்க பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவன கட்டளைச் சட்டத்தின்படி, பணிப்பாளர் முழுநேர அதிகாரி, முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் நிறுவனத்தின் கணக்கு அதிகாரி ஆவார். பணிப்பாளர் முகாமைத்துவ சபையின் தலைவர் மற்றும் நிறுவனத்தின் கல்விக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார். நியமிக்கப்படும் பணிப்பாளர் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று ஆண்டு காலம் அல்லது 65 வயது பூர்த்தியாகும் வரை முதலில் வரும் நிகழ்வு வரை பதவி வகிப்பார்.

பட்டப்பின்படிப்பு கற்கை பயிற்சி மற்றும் முகாமைத்துவத்தில் அனுபவத்துடன் பௌத்த கற்கைகளில் புகழ்பெற்ற சிரேஷ்ட கல்வியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

முறையான கல்விசார் பின்னணி, ஆய்வு மற்றும் முகாமைத்துவத்தில் சிறந்த பதிவு மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் பார்வையுடனான தனிநபர் ஒருவரை முகாமைத்துவ சபை தேடுகிறது.

பணிப்பாளர் U-AC 5 சம்பள அளவு மற்றும் பதவிக்கு பொருத்தமான கொடுப்பனவை பெறுவதற்கு தகுதி பெறுவார். தற்போது பொதுச் சேவையில் உள்ள மேலுள்ள சம்பள அளவை விஞ்சி சம்பளம் ஒன்றை பெறுவர்களுக்கு இணையான சம்பளம் ஒன்று நிர்ணயிக்கப்படும். விண்ணப்பதாரர் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஆசிரியர் ஒருவராக இருந்தால், சம்பள அளவின் 124% + 13,300/- இன் கல்விசார் கொடுப்பனவு வழங்கப்படும்.

**பணிப்பாளருக்கு வழங்கப்படும் மற்ற நன்மைகள்:**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகரித்த போக்குவரத்து கொடுப்பனவுகள்
- அடிப்படை சம்பளத்தின் 12% பொழுதுபோக்கு கொடுப்பனவு
- பல்கலைக்கழக சேமலாப நிதிய (UPF) பங்களிப்பு.
- ஊழியர் நம்பிக்கை நிதிய (EPF) பங்களிப்பு.

**பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.**

- பிறப்புச் சான்றிதழ் உட்பட (பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்) விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக் கோவை
- பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் மேற்கொள்ளும் அடைவு தொடர்பில் சுருக்கமான விபரம் மற்றும் நிறுவனத்தின் அபிவிருத்திக்கான நோக்கு அறிக்கை ஒன்று
- அவர் பதவிக்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரை விடுவிப்பது தொடர்பில் குறிப்பிட்டு தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் ஒன்று (இலங்கை, பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனம் தவிர உயர் கல்வி நிறுவனங்கள், பொதுச் சேவை, கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தும்.)

குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களாயின் முகாமைத்துவ சபைக்கு நிறுவனத்திற்கான நோக்கத்தை முன்வைத்தல் வேண்டும். நியமனத்தின் தேர்வு நடைமுறை நியமன நடைமுறைக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024.01.01 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க ப.மா.ஆ. சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை 2025.07.28 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் பிரதிப் பதிவாளர், பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனம், 977/5, பல்கலைக்கழக பாதை, புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி என்ற முகவரிக்கு முத்திரை இடப்பட்ட கடித உறை ஒன்றில் சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி/ PGIPBS" என்று பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமை பெறாத அல்லது தேவைகளை உறுதி செய்யாத அல்லது இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தவிர, ஏதேனும் ஆதரவு ஆவணங்களுடன் சேர்த்து மேலுள்ள ஆவணங்களின் மென்பிரதி ஒன்று PDF வடிவத்தில் sjayasekara@kln.ac.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 2024 ஜனவரி 1 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க ப.மா.ஆ. சுற்றுநிருபத்தை பார்க்கவும். (www.ugc.ac.lk என்ற முகவரியில் சுற்றுநிருபத்தை தரவிறக்கம் செய்ய முடியும்).

**எல்.ஏ. சுமித் ஜயசேகர**
**பிரதிப் பதிவாளர் மற்றும் முகாமைத்துவ சபை செயலாளர்**
**பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**977/5, பல்கலைக்கழக பாதை,**
**புலுகஹ சந்தி,**
**கண்டி வீதி,**
**களனி**

**2025 ஜுலை 04 வெள்ளிக்கிழமை**